செ.வெ.எண்.120/2018 நாள்: 20.03.2018

# உத்திரகாண்ட் மாநிலம், டெஹ்ராடூனில் உள்ள ராஷ்ட்ரிய இந்தியன் ராணுவக் கல்லூரியில் 8 ஆம் வகுப்பில் சேருவதற்கான தேர்விற்கு விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது

உத்திரகாண்ட் மாநிலம், டெஹ்ராடூனில் உள்ள ராஷ்ட்ரிய இந்தியன் ராணுவக் கல்லூரியில் 8 ஆம் வகுப்பில் சேருவதற்கான தேர்விற்கு விண்ணப்பிக்க தகுதியுள்ள மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க 01.01.2019 அன்றைய நாளின்படி 7ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது 7ஆம் வகுப்பு பயிலுபவராக இருக்க வேண்டும். வயது வரம்பு 01.01.2019ன்படி குறைந்தபட்சம் 11½ வயதும், அதிகபட்சம் 13 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். 02.01.2006 தேதிக்கு பிறகும் 01.07.2007 தேதிக்குள் பிறந்திருக்க வேண்டும்.

விண்ணப்ப கட்டணமாக பொதுப்பிரிவினர் (General) ரூ.600-ம், ஆதிதிராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட (SC/ST) வகுப்பினர் ரூ.555-ம் செலுத்த வேண்டும். விண்ணப்ப கட்டணத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் “THE COMMANDENT RIMC DEHRADUN” vDk; ngahpy; TEL BHAVAN DEHRADUN, (Bank Code:01576) Uttrakhand-ல் செல்லத்தக்க வகையில் வரைவேலையாக எடுத்து The commandant, RIMC-Dehradun – 248003, Uttarakhand state என்ற முகவரிக்கு அனுப்பி விண்ணப்பப் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

01.06.2018 மற்றும் 02.06.2018 ஆகிய 2 நாட்கள் தேர்வுகள் நடைபெறும். தேர்வுகள் ஆங்கிலம் (125 மதிப்பெண்கள்), கணிதம் (200 மதிப்பெண்கள்), பொது அறிவு (75 மதிப்பெண்கள்) ஆகிய பிரிவுகளில் தேர்வுகள் நடைபெறும். வாய்மொழி தேர்வு 04.10.2018 அன்று (50 மதிப்பெண்கள்) நடைபெறும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 31.03.2018க்குள் தேர்வுத்துறை கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு www.rimc.org என்ற இணையதளம் மூலம் அறியலாம்.

**செய்தி வெளியீடு,**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்